**செ.வெ.எண்: 01** **நாள்: 01.02.2017**

**மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மறுவாழ்வை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகா களமாவூரில் இயங்கிவரும் ரெனோசான்ஸ் மலர்ச்சி மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி வளாகத்தில் தேசிய அறக்கட்டளையின் உள்ளூர் குழு கூட்டம் (National Trust-Local level Committee) மற்றும் பெற்றோர்களுக்கான விழிப்புனர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 31.01.2017 அன்று நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது.

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. மனவளர்ச்சி குன்றியோர், மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோர், புறஉலக சிந்தனை இல்லாதோர் மற்றும் பல்வகை குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக தேசிய அறக்கட்டளை சட்டம் இயற்றப்பட்டு அச்சட்டத்தின்படி மாவட்டம் தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் உள்ளூர் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு மேற்படி மாற்றுத்திறனாளிகளின் நலன் பேணிக்காக்கப்பட்டு வருகிறது. இக்குழுவின் மூலம் 18 வயதிற்கு மேற்பட்ட மேற்குறிப்பிட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு சட்டப்பூர்வமான பாதுகாவலர் நியமண சான்றும் வழங்கப்படுகிறது. இதன் மூலம் 18 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளையும் அவர்களது உடமைகளையும் குழுவால் நியமிக்கப்பட்ட பாதுகாவலரால் பேணிபாதுகாக்கப்படும். இதன்படி நமது மாவட்டத்தில் களமாவூரில் இயங்கிவரும் ரெனோசான்ஸ் மலர்ச்சி மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி வளாகத்தில் தேசிய அறக்கட்டளையின் உள்ளூர் குழு கூட்டம் (National Trust-Local level Committee) மற்றும் பெற்றோர்களுக்கான விழிப்புனர்வு கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ரெனோசான்ஸ் தொண்டு நிறுவனத்தின் மூலம் 18 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்களின் தொழிற்பயிற்சி நிலையம், சிறப்புப்பள்ளி ஆகியனவும் அரசு நிதியுதவியுடன் செயல்பட்டு வருகிறது, இப்பயிற்சி மையத்தின் மூலம் கால்மிதியடி (Door Mate) மனவளர்ச்சி குன்றியவர்களால் தயார் செய்யப்படுகிறது. இக்கூட்டத்தில் பாதுகாவலர் நியமனசான்று 7 நபர்களுக்கும், மூன்று நபர்களுக்கு மடக்கு சக்கர நாற்காலியும்,மற்றும் கால்மிதியடி தயாரிப்பின் மூலம் வரப்பெற்ற லாபத்தொகையை அதனை தயார் செய்த மனவளர்ச்சி குன்றியநபர் ஒருவருக்கு ரூ 900/வீதம் 6 நபர்களுக்கு ரூ.5400 அவர்களுக்கு ஊக்கத்தொகையையும் வழங்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு மாதம் ரூ.1500 பராமரிப்பு உதவித்தொகை வழங்கபட்டு வருகிறது. இத்தகைய திட்டங்களின் மூலம் மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மறுவாழ்வை உருவாக்குவதில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை பெரும் பங்கு வகிக்கிறது. எனவே இத்தகைய நலத்திட்டங்களை மாற்றுத்திறனாளிகள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பூ.சரவணகுமார், ரெனேசான்ஸ் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பள்ளியின் தாளாளர் திரு.பி.மகாலிங்கம், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.கோ.வசந்தராமகுமார், திருச்சி ஸ்பாஸ்டிக் சொசைட்டி நிறுவனத்தின் தலைவர் திரு. சாந்தகுமார், வள்ளலார் காப்பக தொண்டு நிறுவன இயக்குநர் திரு. பிரகதீஸ்வரன், ஸ்கார்ப் தொண்டு நிறுவனத்தின் ஒருங்கினைப்பாளர் திரு. சேகர் மற்றும் அரசு அலுவலர் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**